NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 13 July 2015

# ஐவருக்கு சிங்கப்பூர் இளையர் விருது

விக்டோரியா அரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐந்து இளையர்களுக்கும் ஓர் அமைப்புக்கும் இவ்வாண்டின் சிங்கப்பூர் இளையர் விருது வழங்கப்பட்டது.

இளையர்களுக்கான நாட்டின் இந்த உயரிய விருதை தேசிய இளையர் மன்றம் வழங்கி அங்கீகரித்துள்ளது.

சமூகத்துக்கு சிறந்த பங்கு ஆற்றியவர்களுக்கும் தங்களுடைய துறையில் சிறப்பாகச் செயல்பட்டவர்களுக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றன.

இவ்வாண்டின் விருது பெற்ற ஜோசபஸ் டான், சிங்கப்பூர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் பல சமூகத் திட்டங்களுக்கு தலைமை வகிக்கிறார்.

பாலியல் தொழிலாளர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்குவதும் அவரது சமூகத் திட்டங்களில் ஒன்று.

இவர் தவிர விருது பெற்ற மற்றொருவர் தென்கிழக்கு ஆசிய விளையாட்டில் நான்கு பதக்கங்களையும் 2012ஆம் ஆண்டில் 'சிலாட்' உலக சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் வென்ற ஷகிர்.

இவர், மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் தன் முனைப்பு உரைகளை நிகழ்த்தி கனவுகளை அடையும் வழிகளைச் சொல்லி வருகிறார்.

ஓவியரும் திரைப்படத் தயாரிப்பாளருமான பிரையன் கோதாங் டான், ரசாயன பொறியியலாளரும் சமூக ஆர்வலருமான டாக்டர் சிவ் ஜியா வெய், இசைக் கலைஞர் யாங் ஜி வெய் ஆகியோர் விருது பெற்ற மற்றவர்கள்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பூமி பாதுகாப்பு மாணவர் அமைப்பு, விருது பெற்ற ஒரே அமைப்பாகும். இதன் மாணவர் குழுவினர் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் சேர்ந்து வளாகத்தில் சுற்றுச் சூழல் திட்டங்களை அறிமுகப்படுத்தினர். அனைத்துலக நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்கேற்று பிரதிநிதித்தனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.